# கரம்பொன் யுவன் கவிதைகள்




**ஊர்காவற்துறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையின்
முன்னாள் அதிபர் திரு அ. யுவக்கீம்பிள்ளை அவர்கள்
எழுதிய கவிதைகளின் தொகுப்பு**

தேடல் அன்ரன் றெக்சி அந்தோனிமுத்து

தொகுப்பு அன்ரனி லவ்லின் செல்வநாயகம்

*கரம்பொன் யுவன்*



*அமரர் திரு. அ. யுவக்கீம்பிள்ளை அவர்கள்*

*(1920 – 2003)*

## *முன்னுரை*

*காவலூர் படைப்பாளிகளின் ஆக்கங்களைச் சேகரித்து ஆவணப்படுத்தும் நோக்குடன் இணையத்தில் தேடல்களை மேற்கொண்டபோது, ஊர்காவற்றுறை றோமன் கத்தோலிக்க ஆண்கள் பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. அ. யுவக்கீம்பிள்ளை அவர்கள் ''கரம்பொன் யுவன்'' எனும் புனை பெயரில் சத்திய வேத பாதுகாவலன் பத்திரிகைக்கு எழுதிய பல கவிதைகள் கிடைக்கப்பெற்றன. அவற்றுடன் ஆசிரியர் திரு. எஸ். எம். ஜோசவ் அவர்கள் எழுதிய ''கரம்பொன் பங்கு மலர்'', ''ஊர்காவற்றுறை புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டுச் சிறப்பு மலர்'' ஆகிய சிறப்பு மலர்களிலிருந்து எடுக்கப்பட்ட கவிதைகளையும் இங்கு தொகுத்துத் தந்துள்ளோம். இக்கவிதை மலரினை தற்போது சமூக வலைத் தளங்களில் வெளியிடுகின்றோம். காலம் கனிந்துவரும்போது அச்சுப் பிரதிகளாகவும் வெளியிட முடியுமெனக் கருதுகின்றோம். அதிபர், அ. யுவக்கீம்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டு ஏறத்தாள அரை நூற்றாண்டுகளுக்கு முன் பத்திரிகைகளில் வெளியான இந்த அரிய கவிதைகளைத் தவறேதுமின்றி ஆவணக்படுத்தும் நோக்குடன் நேரடியாகத் தரவிறக்கம் செய்து தொகுத்திருப்பதால் எழுத்துக்களின் தெளிவின்மையால் சில கவிதைகளை வாசிப்பதில் சிரமமேற்படலாம். அச்சுப்பிரதியாக வெளியிடும்போது சகல கவிதைகளையும் முறையாகத் தட்டச்சுச் செய்து நவீன முறையில் பிரசுரிக்க முடியுமெனவும் கருதுகின்றோம். காலத்தாலழியாத இந்தச் சிறந்த கவிதைகளை வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்கள் என்று நம்புகின்றோம். கரம்பொன் யுவன் எழுதிய வேறு கவிதைகள் கிடைத்தால் அவற்றை எம்முடன் பகிர்ந்துகொள்ளுமாறும் பணிவுடன் கோருகின்றோம். திரு. எஸ். எம். ஜோசவ், காவலூர்க் கவிஞர் ஜி. எம். செல்வராசா ஆகியோரது படைப்புக்களையும் சேகரிக்க விரும்புகின்றோம் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம். நன்றி!*

*தை மாதம் 2023* — *மலர்க் குழு*

## *யுவன் கவிதை 1*

19-11-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# அன்னையின் ஆகுலம் ஆற்றுவோம்

'யுவன்' — காம்பன்

ஆய்ந்தே அணுச்சக்தி கண்டுவிட்டோம் — அத்தால்
ஆருயிர் கொல்ல முனைந்துவிட்டோம்
தேய்ந்தே வருமெங்கள் தேவபயம் — கண்டு
தேவதாய் உள்ளமே தேறுவளோ? (1)

சாத்திரங் கள்பல கற்றுவிட்டோம் — தேவ
சற்குரு போதனை தள்ளிவிட்டோம்
நேத்திரங் கொண்டுதான் பார்த்திருந்து — எங்கள்
நேசதாய் தன்மனம் ஆறுவளோ? (2)

அநித்திய வாழ்வினில் ஆசைகொண்டோம் — எங்கள்
ஆத்தும நல்வாழ்வை நீத்துவிட்டோம்
இனித்தானும் நாமதபஞ் செய்யாவிடின் — ஐயோ
எங்ஙனம் நம்மன்னை தாங்குவளோ? (3)

வானப் பருந்து மறைந்துவந்தே — குஞ்சை
வாரப் பொறுக்குமோ தாய்ப்பறவை
ஊனப் பிசாசெமை ஈர்க்கையிலே — அதை
எவ்விதம் எம்மன்னை தாங்குவளோ? (4)

தன்னரும் மைந்தனை எங்களுக்காய் — அவள்
தந்தது போதாதோ தாரணியில்
இன்னமும் நாமவள் நெஞ்சினிலே — ஒரு
ஈட்டியை ஏற்றுதல் ஏற்றதுவோ? (5)

இம்மய உச்சியும் கண்டுவிட்டோம் — இனி
என்னே யென்றுஇறு மாந்துகொண்டு
எம்மனப் போக்கில் நடந்துவந்தால் — நேய
எந்திருத் தாய்மனம் தாங்குவளோ? (6)

உத்தமர் மேற்பிழை கண்டுவிட்டோம் — மகா
உச்சித புண்ணிய மார்க்கம்விட்டோம்
நித்திய பாக்கிய வாஞ்சைவிட்டோம் — அந்தோ!
நெஞ்சம் பொறுக்குமோ தாய்மரிக்கே? (7)

ஏற்காத கொள்கைகள் ஏற்றுவிட்டோம் — நாளும்
ஏத்தும் குருமொழி நீக்கிவிட்டோம்
மாற்றங்கொண் டேதீமை நாடிவிட்டோம் — அன்னை
மாமரி தான்மனம் தாங்குவளோ? (8)

கட்டிய பாவம் களைந்திடுவோம் — திவ்விய
கர்த்தனின் நேசமே பெற்றிடுவோம்
அட்டியில் லாதறம் செய்திடுவோம் — எங்கள்
ஆகுலத் தாய்துயர் ஆற்றிடுவோம்! (9)

## ***யுவன் கவிதை 2***

5-11-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# ஆத்துமாக்களின் அபயக்குரல்

[நிலைமண்டல வாசிரியப்பா]

தேவனின் தாயார் திருவருள் இரந்து
ஆவலாய்க் கேளுமெம் அபயக் குரலை
உத்தரிப் புத்தல உறுதுய ரதனை
எத்திறம் உமக்கு இயம்புவம் நாமே!
நிகரிலா வாதை நினைக்கொணா வேதனை
பகரொணாத் துன்பம் படுகிறோம் அந்தோ!
அவியா நெருப்பின் அக்கினிச் சுவாலைமுன்
புவியின் நெருப்பெலாம் பொறியா மன்றோ!
நிலவுல கில்யாம் நிலவிய காலை
புலவர்கள் புகன்ற பொருளுரை மறந்தோம்
குரவர்கள் கூறிய தவநெறி தவறிப்
பரகதி சேரும் பாக்கியம் இழந்தோம்
அஞ்சியும் கெஞ்சியும் அழுதும் தொழுதும்
எங்களால் ஆவதொன் றெங்கட் கிலையினி
உங்களாற் றானெமக் குண்டு நற்பேறு
பூரண பலனும் புண்ணிய மொன்றைநம்
காரணங் கருதிக் காட்ட லாகாதோ?
பெற்றதாய் தந்தாய்! பிரிய சோதரர்காள்!
என்றுநாம் உம்மை இங்கிருந் தழைத்தால்
கேளார் போலக் கேளீர் நீவிர்
வாளா விருந்தால் வாதை நீங்குமோ?
கற்புயர் நற்பெரும் கன்னியர் சபையீர்!
பெட்புறூ திறவறம் பேணும் துறவிகாள்!
கார்த்திகை ஓர்மதிக் காலமே என்கிலும்
பார்த்துமைக் கேட்பதைப் பரிவாய்க் கேண்மின்!
திவ்விய பூசை தினமும் கண்டும்
திவ்விய நன்மையைச் செவ்விதே பெற்றும்
பொலுபொலு வென்று கண்ணீர் உதிரச்
சிலுவைப் பாதையைச் சீர்பெறச் செய்தும்
மரியாள் விரும்பும் மந்திர மாலையைப்
பிரியத் துடனே பலருடன் செபித்தும்
வறியோர்க் கீந்தும் வன்பசி களைந்தும்
அறிவில் லார்க்குநல் லறிவினை ஊட்டியும்
இன்ன பிறவுமாய் எய்திடும் பலன்களைக்
கன்னிகை வழியாய்க் கர்த்தருக் களித்து
எம்மை மீட்பிக்க இன்றே எழுமின்!
அருள்மிகு மரியாள் திருவருள் இரந்து
ஒருவரம் பெறுவீர் உற்றோர் நீரே!
பட்டிடும் கடனைப் பரகதி சேர்ந்ததும்
வட்டியும் முதலுமாய்த் தருவோம் யாமே.

— நவயுவன், ‘காம்பன்.

## *யுவன் கவிதை 3*

27-5-1957 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது



# கபாலமலையிற் கன்னித்தாய்

எழுசீர் விருத்தம்

1

பொன்னொளி வதனம் புனலிடை முழுகப்
பொலிவிழுந் திருகரம் பதறக்
கன்னலும் திளைக்கும் இன்மொழி கழறும்
கயிரவ* வாயிதழ் துடிக்க
அன்னையாய்ச் சுமந்த ஆலிலை உதரத்
தக்கினி மூண்டெழ அயர்ந்தே
தன்மகன் துயராற் சவித்தனள் கன்னித்
தாய்திருச் சிலுவையின் கீழே

2

மங்களம் மொழிய வானவர் இடையர்
மண்டியிட் டடியினைப் பணியச்
சங்கம மாகி வந்திடும் மூன்று
தாரணி மன்னவர் போற்ற
இங்கித மாகத் தன்மகன் பிறக்க
இவையெலாம் கண்டகண் கலங்கத்
தொங்கிடும் மகனைச் சிலுவையிற் கண்டே
சோகமுற் றழன்றனள் தாயார்

3

பரத்தினர் பணியும் பரமனை மகனைப்
பாவிகள் படுத்திய பாடும்
சிரத்தினில் அவர்க்கே இருத்திய முடியின்
சித்திர வாதையும் செம்மைக்
கரத்தினிற் காலிற் பதித்தகூர் ஆணிக்
காயமும் உட்புக உளத்தே
சரத்தினிற் துடிக்கும் பிணையெனச் சுருண்டு
சாய்ந்தனள் குருசொடு தாயார்

4

நாட்டிய குருசில் நாதனும் படிந்து
நாவரண் டுரைத்தசொற் கேட்டே
ஊட்டிய அமிர்தப் பாலினைப் பின்னும்
உடலிலே சுரந்தன ளாகி
நீட்டிய கரங்கள் நெஞ்சினை அழுத்த
நிமிர்ந்துமேல் நோக்கிய வண்ணம்
மூட்டிய உலையில் மூழ்கிய புழுப்போல்
மூச்செழத் துடித்தனள் தாயார்

5

குருசினை அணைத்துக் கொண்டநற் தாயார்
குவலயம் மீட்டிட மரித்த
திருமகன் சொரிந்த செம்புன லாற்தன்
திருத்துகில் தோய்ந்ததைக் கண்டும்
ஒருவழி யூனன் ஈட்டிதன் மைந்தன்
ஒண்விலாத் திறந்திடக் கண்டும்
இருவிழி யிறுக்கி மூடினள் சகிக்க
ஏதிலா விருதயம் பதைத்தே.

கயிரவம்* செவ்வாம்பல்

'யுவன்' — காம்பொன்

# *யுவன் கவிதை 4*

17-06-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

## மருதமடுச் செபமாலை நாயகிக்குத் துதி

### இரட்டை யாசிரிய விருத்தம்

**1**

மதங்கொண்ட யானையும் மாமடுப் பதியிலே
வந்திடின் மதமகன்று
மத்தகத் துச்சியில் வைத்தகை யாகவே
மண்டியிட் டொளிருதிங்கட்
பதங்கொண்ட நின்னெழிற் பாதமே தாழ்தலும்
பாய்புலிக் குழாமதெல்லாம்
பசுவினிரை யென்னவப் பதியிலே கூடிநின்
பகையான அலகைதன்னை
அதங்கொண்ட வலியவுன் அடிகளைத் தொழுதலும்
ஆயிரம் கோடிபக்தர்
அந்தியும் சந்தியும் அஞ்சலே செய்வதும்
அடியார்க் குரைக்கவேண்டும்
இதங்கொண்ட தேன்மலர்ச் சோலைசூழ் காட்டிலே
இடங்கொண் டெழுந்துநின்றே
இறையவனை யடைவதற் கெளிதான செபவடம்
இனிதேந்து கன்னிமரியே !

**2**

கானகப் புள்ளினம் கூடிமுக் காலமும்
கானம திசைத்துநின்மேல்
கட்டிடும் கவிதைகள் காதினுக் கெட்டிடக்
கயல்களும் கழனிவிட்டே
வானகம் பாய்ந்துதம் வாயிலே வாவினை
வைத்துமே அதிசயித்து
வந்துபின் வாவியில் வீழ்கையிற் சிந்திடும்
வண்ணப்பூந் தாதினாலோ
கூனகக் கரடிதேன் கேட்டே குளக்கரைக்
கொம்பிலே குந்துமந்தி
கூடுடன் தேனினைக் கொட்டிடச் சிந்தியோ
குளத்துநீர் இனிப்பதம்மா !
மீனகம் கொண்டதேன் சுனையினுக் கருகிலே
மின்னுபொற் கோயில்கொண்ட
மீன்முடிச் செல்வியே மிளிருசிங் காரியே
மேதினிக் கினியதாயே !

**3**

தாயற்ற சேயும்நின் தண்ணடிக் கண்மையில்
தனிமையைத் துறந்துகொள்வான்
தணியாத துயருள்ள பிணியனும் அங்குதன்
சஞ்சலந் தீர்ந்துகொள்வான்
சேயற்ற மலடிநின் செங்கரம் நோக்கிமெய்ச்
செல்வமும் கண்டுகொள்வாள்
செய்தொழில அறியாமற் திகைத்திட்ட கோழையும்
செயலொன்று தேர்ந்துகொள்வான்
வாயற்ற ஊமைநின் வாண்முகங் கண்டதும்
வாழ்த்திடத் தெரிந்துகொள்வான்
வாடியே அலகையால் ஆடிடுங் கேடனவ்
வலகையும் விலகமீள்வான
பாயற்ற படகுபோல் அலையாமல் மக்களும்
பரகதிக் குயரவேண்டிப்
பதமசிம் மாசனத் திருந்தெமைப் புரந்திடும்
பரமனின் திருவன்னையே !

‘யுவன்’ — கரம்பொன்

## *யுவன் கவிதை 5*

10-12-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# ஒளியின் உதயம்

### வெண்பா

1. வானம் புரக்க வரண்டிருந்த வையகத்தே
ஞானம் பெருக்கி நலமளிக்க — ஈன
மனிதகுல மீடேற்ற மன்னன் உதிப்பச்
சனித்தாளே மாசின்றித் தாய்.

2. ஆனாள் யுவக்கீம் அன்னைதந்தை யாகவே
கோனார் அருளாற் கருவானாள் — *மானாருள்
எண்ணற்ற ஆசி இறைவன் திருவருளால
மண்ணிலே பெற்றுயர்ந்த மாது.

3. காயின் வழியாகக் காசினியிற் சூழ்ந்துவரும்
கோயின் கெடுதியின்றிச் சூலானாள் — பேயின்
இருளோட்டி ஞான இன்ப ஒளிகூட்டி
அருளூட்டும் அன்பின் அணங்கு.

4. அரவாக நிற்கும் அலகையே உன்றன்
தரம்நசுக்கத் தையல் படைப்போம் — நரசிலென
பேஎய் கலங்கப் பிதாச்சொன்ன பெண்ணான
தாஅய் சனித்தாள் தலத்து.

5. முக்காலும் கன்னிகையாள் மூவுலகும் நற்றாயாள்
எக்காலும் எங்கள் இராக்கினியாள் — அக்காலை
மானார் குலத்தின் மணியாய் வரக்கருவாய்
ஆனாள் மலமொன்ப தற்று.

6. கார்சூழ் வரைசேர் கலிலேய நன்னாட்டில்
பார்புகழும் தாவீதன் சந்ததியில் — மார்கழியின்
நாலிரண்டாம் நாளினிலே நங்கை உருவாகிச்
சூலிருந்தாள் துன்பம் துடைக்க.

7. பாவ நிழலின்றிப் பாருலகில் உற்பவித்த
தேவ சுதனின் திருத்தாயை — ஆவலொடு
போற்றி வருபவரின் பொல்லாத் துயரெல்லாம்
காற்றாய்ப் பறக்குமே காண்.

*மானார் — பெண்கள்.

'யுவன்'

## ***யுவன் கவிதை 6***

27-08-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# பாலா! கேள்.

1

காலையி லேதுயில் நீத்தவுடன் பாலா!
கர்த்தனைப் போற்றி வணங்கிடுவாய்!
மாலையி லேதந்தை தாயருடன்செப
மாலை செபித்து மகிழ்ந்திடுவாய்!

2

நித்தமும் பூசையே கண்டிடுவாய்! என்
[றும்
நேர்மையின் வழியே நின்றிடுவாய்!
சத்திய மானவர் தந்தநற் கற்பனை
தன்னையே பற்றி நடந்திடுவாய்!

3

பாடிக் களித்து வளர்ந்திடுவாய் பாலா!
பாவம் விலக்கி நடந்திடுவாய்!
ஆடிக் களித்து வளர்ந்திடுவாய் என்றும்
ஆரோக்ய மாகநீ வாழ்ந்திடுவாய்

4

பெற்ற வரைக்கனம் பண்ணிடுவாய்
[அன்பாய்ப்
பேணி யன்னாரைப் பணிந்திடுவாய்!
உற்றவரைப் புறந் தள்ளாதே எங்கும்
உத்தமன் என்றுபேர் பெற்றிடுவாய்

5

உண்மையைப் பேசி உயர்ந்திடுவாய்!
[நிதம்
உத்தம ரோடுற வாடிடுவாய்!
வண்மை படைத்து ஏழைகட்கீந்துநல்
வாழ்வு பொருந்தியே வாழ்ந்திடுவாய்!

6

உத்தரிப் புத்தல மக்களுக்காய் நீயும்
உன்னால் இயன்றதைச் செய்திடுவாய்!
அத்தலத் தோர்க்குநீ ஆறுதல் செய்தி
[டின்
ஆறுதல் உண்டுனக் கென்றறிவாய்

7

நாளும் ஒருபொழு தாகிலும் நாடிநீ
நற்கரு ணைத்திரு நாதரடி
தாழப் பணிந்து வணங்கியே யேசுவின்
தாசனாய் நாளுமே வாழ்ந்திடுவாய்!

8

நன்னிலை பெற்றிட வேண்டுமெனிற்
[பாலா
நல்லவை நாளும்நீ செய்திடுவாய்!
கன்னியாம் மாமரி காவலிலேஉன்னைக்
கையளித் துப்புவி வாழ்ந்திடுவாய்.

'யுவன்'
காம்பொன்.

## *யுவன் கவிதை 7*

24-06-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# தெய்வீக விருந்து

'யுவன்' காம்பொன்

### கட்டளைக் கலித்துறை

I

பாசப் பெருக்கால் மனுவாகி ஆவி பலிகொடுத்து
நீசப் பவத்தின் தலைநீக்கி மோட்ச நெறிதிறந்து
தாசர் மனத்தே மனுவாய் அமரத் தயைபுரிந்த
நேசர் இருக்கப் பிறிதென்ன வேண்டுமெம நெஞ்சினுக்கே

II

மாயும் உடலை வளர்ப்ப உலையோம் மறமிகுத்தால்
வீயும் எழிலான்மம் வீழ நரகினில் விட்டுவிடோம்
தாயும் கொடுக்கா இதவாழ்வும மேலாம் தயைவரமும்
ஈயும் இறையைப் பெறுவோம நிதமும் இருதயத்தே

III

நீல விழிநீரில் பாதங் கழுவி நிலந்தொடுநீள்
கோலக் கருங்கூந்தற் பட்டால் துடைத்த கொடும்பவத்தாள்
சீலம் அடைந்திடச் செய்திட்ட அர்தத் திருவருளோன்
தாலத் தெமக்கும் உணவாதல் விஞ்சுந் தயைப்பெருக்கே

IV

மருந்தும் அவராகி மாறாப் பிணிக்கே மனதுவக்கும்
விருந்தும் அவராகி மீட்சி அடைய விரும்புபவர்
அருந்தும் படியாய் அமலன் இருப்ப அதைமறந்தால்
பொருந்தும் பெருவாழ்வு பொன்றில் அகன்றற்றுப் போய் விடுமே

V

சங்கம் வளர்த்த தமிழ்போற் பரந்தே தமதுதிரம்
எங்கும் செறிய எமதன்பில் இன்னலை ஏந்தினவர்
தங்கும் இடமாக எங்கள் உளத்தினைத் தாம்தெரியில்
பொங்கும் அருள்வாழ்வு வேறென்ன எங்கட்குப் பூதலத்தே

## யுவன் கவிதை 8

06-05-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# ஈடற்ற இரக்கத்தின் மாதா

### அறுசீர் விருத்தம்

1

விண்ணவர்க்குக் கிட்டாத விருந்தளிக்க வந்துதித்த விமலனாலே
தண்ணிழற்கா மலியுமெழிற் கானாவில் மதுரசமாய்த் தண்ணீர்மாற்றி
மண்ணவர்கள் அதிசயிக்க மணமனையின் தலைவனது மானங்காத்த
எண்ணளவில் லாதபெரும் இரக்கமுள்ள எந்தாயர்க் கீடுயாரே!

2

கத்தருக்கு முப்பதிலே கைத்தாதை இறந்துவிடக் கடைசிமட்டும்
புத்திரனின் இரட்சணியப் பாதையிலே பின்நடந்து புன்மைபோக்கி
முத்திதர எங்களுக்காய் முழுவாழ்வும் அர்ப்பணித்த முதல்வியான
அத்தியந்த அருள்பெருகும் அன்னையினை அனையவொரு அணங்குமுண்டோ!

3

மணியாரங் கரம்மிளிர மதிமுகத்தே நகையரும்ப மசபியேலில்
பணிவாருக் கருள்சுரக்கப் படர்கொடியிற் பதமூன்றும் பான்மைதோற்றி
பிணிதீர்க்கும் மருந்தாகப் பெருமூற்றைப் பிறப்பித்துப் பெண்ணால்தந்த
தணியாத இரக்கமுள்ள தாயார்க்குத் தலமிரண்டுந் தகுதியாரே!

4

செபவழியிற் திறம்பாமல் செயம்பெறநற் செபமாலை செகத்திற்கீந்தே
தபவழிக்குத் தங்கடமை தவறாமை தக்கதெனத் தானேகாட்டி
அபரிமித மானதவம் அவனிதனில் புரிந்துதவி அடியார்க்கெல்லாம்
அபாவழி* யடைத்தமலன் அடியடைய அருள்வாளை அனையார்யாரே!

5

மன்னுயிரைப் படைத்தமுதம் அளித்துவரும் மகத்துவஞ்சேர் ஈசனாரும்
தன்கருணை பெருமளவு காட்டிடினும் தமதுடைய தாழாநீதி
நின்றநிலை பிறழாமற் கடையிடத்துக் குறைகடியும் நீர்மையாலே
எந்நிலையும் இரக்கமருள் எந்தாயாம் மாமரியாய்க் கீடுயாரே!

*அபாவழி = நரகபாதை

'யுவன்' — காம்பொன்

## ***யுவன் கவிதை 9***

21-01-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# சரிதானா?

1

பல்லிச் சப்தம் கேட்டவுடன்
பட்டது காரியம் கெட்டதெனச்
சொல்லிச் சித்தம் குலைவாரின்
சோதிடம் எல்லாம் சரிதானா?

2

கத்தன் தந்த நாள்எழில்
கழிவும் திறமும் உண்டென்றே
நித்த நிமித்தம் பார்ப்போர்கள்
நினைப்பது எல்லாம் சரிதானா?

3

போகப் பயணம் புறப்பட்டார்
பொல்லாப் பொருள்கள் முன்னிற்க;
யோகம் கெட்டே போச்சென்பார்
யோசனை எல்லாம் சரிதானா?

4

வாய்வும் பித்தும் தலைக்கேறி
வாயாற் பிதற்றும் நோயினரைப்
பேய்தான் என்று பார்ப்போரின்
பேதமை எல்லாம் சரிதானா?

5

இவ்வா றெங்கள் மத்தியிலே
இன்னும் கொஞ்சம் இருக்கின்ற
ஒவ்வாப் பிழைகள் களையாமல்
ஒதுங்கி இருத்தல் சரிதானா?

(யுவன்)

## ***யுவன் கவிதை 10***

12-11-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# சதாசகாய நாயகிக்கு அஞ்சலி

எழுசீர் விருத்தம்

(1) மதியேறு பாத கனையேக ரத்ன
மணிவன்ன தவிசில் ஏறி
நிதியேறு ரோசை நகரேறி ஆங்கு
நிலவுமத் தேயு கோவிற்
பதியேறு தாயே படிமேலுன் இன்ப
பதந்தேடு மாந்தர் பரம
கதியேற நற்ச காயத்தை நல்கு
கருணைக்கும் என்ன நிகரே!

(2) பயங்கொண்ட பால நிலைகண்டு நன்று
பலமூட்டி அன்பு காட்டி
மயங்கொண்ட செல்வ மடிமீ தமர்த்தி
மனமாற்றி மகிழ்வு கூட்டி
நயங்கொண்ட கையை நரதேவர் கையில்
நவியாது வைத்து நரகின்
செயங்கொண்ட தேவி திகழ்கின்ற உன்றன்
சிறப்பிற்கும் என்ன நிகரே!

(3) முருக்கம்பூ நாணி முகிழோடு நிற்க
முதலாய செம்மை யோங்கி
இருக்கும்நல் லாடை எழிலோடு தாங்கி
இணையற்ற பச்சை அணியில்
பெருக்கும்நற் சரிகை கரைதாங்கி யத்தைப்
பிரியாது மேனி போர்த்தி
உருக்கும்பொன் போல ஒளிகொள்உன் வதன
உயர்வுக்கும் என்ன நிகரே!

(4) இலங்கும் பசும்பொன் இழைத்தமா முடியை
இணையற்ற சென்னி சூடித்
துலங்குஞ்செங் காந்தள் கரமீது தாங்கு
சுதனுக்கும் ஒன்று சூட்டிக்
கலங்குஞ்சே யன்னுர் இருகாலும் பூண்ட
கவின்பாத அணியு ளொன்று
விலங்கற்றே தொங்க வொளிர்கின்ற உன்றன்
விமலத்திற் கென்ன நிகரே!

(5) திருமாது நீயே திடமாது நீயே
திகிலுற்று அலகை அஞ்சும்
செருமாது நீயே செயமாது நீயே
செகமீது சதாச காயம்
தருமாது நீயே தயைமாது நீயே
தவழ் சென்ம மாசு சாரா
ஒருமாது நீயே யொழியாத வுன்றன்
உதவிக்கு மென்ன நிகரே!

'யுவன்'— காம்பன்.

## ***யுவன் கவிதை 11***

26-11-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# செபமாலைத் தாயே!

(நேரிசை வெண்பா)

1

ஐம்பத்து மூன்று அருமணிகள் கொண்டிழைத்த
செம்பொன் வடமொன்றைச் சேர்த்தணையே—அம்புவியில்
அல்லல் பலநீக்கி அத்தன் பதஞ்சேர்க்கும்
நல்ல வடமாய் நமக்கு.

2

தூதன் திருமொழியும் தூயெலிச பெத்வாழ்த்தும்
வேதம் தொழுதுவரம் வேண்டுதலும்—ஓதவே
மூவிதழும் கொண்ட முழுமலர்கள் தான்புனைந்து
பூவினுக்குத் தந்தாயோர் பொன்.

3

அல்பிசென்சர் என்னும் அடங்காப் பதிதமதத்
தொல்லை கெடத்தோன்றித் தூமாலை—சொல்லெனவே
முன்சாமி நாத முனிவரிடம் தந்திருப்ப
என்னெமக்கு வேண்டும் இனி.

4

திருப்பாப்பு வேண்டத் திருச்சபையோர் ஓதத்
துருக்க படைசிதைத்த தூய—திருத்தொடையைத்
தந்தாய் அழியாத் தலஞ்சேரத் தாரிணுக்கே
எந்தாய் இதற்கென்ன ஈடு.

5

நேசத் திருத்தாயார் நெஞ்சம் மிகவிரும்பும்
வாச மலர்கொண்ட மாலையெனத்—தாசர்நாம்
பாசப் பெருக்கோடு பன்முறையும் ஓதுவமே
நேசமுற வேண்டுவரம் நேர்ந்து.

— 'யுவன்', காம்பொன்

## ***யுவன் கவிதை 12***

25-02-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# தாயார் காட்டிய தாழ்மை

### கட்டளைக் கலிப்பா

1

மின்னிப் பொன்னெழில் வீசிடு மாலயம்
மேவிப் பெற்றவர் விட்டபின் மாசிலாச்
சின்ன மாமரி கன்னியி ரேழினில
சீல கன்னிமை தேவனுக் சேயென
உன்னி வாழினும் மன்றலைச் செய்கென
உத்த மன்சிமி யோனுரை செப்பிட
என்ன நேரினும் சொன்னதை ஏற்றது
எங்கள் அன்னையின் ஈடிலாத் தாழ்மையே

2

வேத ஞானிகள் கூறிய வைகிறை
வேறு வேளையும் முற்றிடத் தேவனின்
தூத னர்சுதன் தோற்றிடு வாரெனத்
தோற்றி யேமொழி சாற்றிடக் கேட்டதும்
நாத னர்க்கடி யாளெனக் கூறியே
நன்ம னத்துடன் சொன்னதை ஏற்றமை
பாதம் வெண்மதி பற்றிய சுந்தரப்
பாவ மாசிலாத் தேவதாய் தாழ்மையே

3

தூய தேவனைத் தன்வயின் கொண்டபின்
துங்க பேட்டினில் இங்கிதம் கொண்டொளிர்
தாய மாதெலி சாள்மனை நாடியே
தங்கி வேண்டிய தொண்டுகள் செய்தது
பாய மாரத மேறிடு ஞாயிறு
பற்றி யேயொளி சுற்றிடும் உன்னதக்
காய மோடுயர் வானவீ டேறிய
கன்னி மாமரி அன்னையின் தாழ்மையே

4

பெற்ற பாலகன் தேவனே யாயினும்
பேரின் பப்பர னர்க்கென அர்ப்பணம்
மற்ற வர்செயு மாறுதன் சேயையும்
மாட்சி சேர்திருக் கோயிலின் வாயிலில்
விற்று மீட்டதும் வெண்ணிறப் புட்களை
விட்டு ஆர்த்ததும் வாழ்த்துதல் கேட்டதும்
துற்ற வேயுடு சுற்றிடும் மாமுடித
தூய தாய்மரித் தாயது தாழ்மையே.

'யுவன்'

# ***யுவன் கவிதை 13***

28-01-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

## தாயே வரம் தாரும்

'யுவன்' — காப்பொன்

1. பொன்னே! ராஜேஸ்வரீ! கன்னிகையே! வரம்
பூண்டவளே எங்கள் ஆண்டவளே
அன்னேபேர் அன்பு நிறைந்தவ ளேயுன் றன்
ஆண்டிற் பலவரம் வேண்டுகிறோம்.

2. பாவிகட்கா யுன்றன் பாலகனார் பட்ட
பாடுகளா லுற்ற பேறுபலன்
பூவிலெல் லோருமு டைந்திட வேயருள்
பூண்டி டம்மாஎமை ஆண்டிடம்மா!

3. கற்றவருங் கல்வி அற்றவருங் கத்தர்
காட்டிய பாதையை விட்டிறங்கி
மற்று மொருவழி செல்லுகிறார் இதை
மாற்றும் அம்மாவழி காட்டுமம்மா!

4. சுற்று மிருப்புத் திரையினுள் ளேதுயர்
சூழச் சிறையிலே வாழ்பவரைப்
பற்றி இருகரத் தாவுகொ டுத்தவர்
பாடு களைந்திட வேண்டுமம்மா!

5. தேசத்தி லேழுத லாளிதொ ழிலாளி
சேர்ந்து வளர்ந்திடச் செய்யுமம்மா!
நேசத்தி லேயவர் நெஞ்சங் கலந்திட
நின்னருள் மாரிபோற் பெய்யுமம்மா!

6. பிஞ்சு மனத்திலே நஞ்சு தெளித்திடும்
பித்தர் தெளிந்திட உத்தமராய்ச்
சஞ்சலஞ் செய்சவுல் தன்னையே மாற்றிய
சற்குரு ஆசிநீ தந்திடம்மா!

7. பாவிகட் கோர்தஞ்சம் நீயல்ல வோமுழுப்
பாருக்கும் நீநேசத் தாயல்லவோ
சாவிலும் தேறுதல் நீயல்ல வோஎங்கள்
சஞ்சலம் போக்கிட வேண்டுமம்மா!

## ***யுவன் கவிதை 14***

21-01-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# தஞ்சத் தாய்

1

கருப்பெனவே வளர்த்தெடுத்த கடவுள் மைந்தன்
காணாமற் கைதவறிப் போன போது
நெருப்பிடையே நடப்பவள்போல் நேசனோடே
நெட்டுயிர்த்து வந்தவழி நீளந் தேடித்
திருப்பதியிற் திரும்பவவர் இருக்கக் கண்டு
தேறிமனங் களிகூர்ந்த தேவ தாயை
விருப்பகலா உளத்தோடு வேண்டி வாழ்வார்
வெல்வதற்கே அரிதான தொல்லை யுண்டோ?

2

அருமையிலும் அருமையுடன் அமலனை
அரவணைத்த திருக்கரங்கொண் டவனியோரைப்
பெருமையிலும் சிறுமையிலும் பேதமின்றிப்
பிரியமுடன் அரவணைத்துப் பேணிநாளும்
அருமறையாம் திருமறையின் அன்னையாகி
அகிலமெலாம் ஆண்டுவரும் அன்புத்தாயை
இருமையிலும் பிரியாத உரிமைபூண்டோர்
ஏங்கவரும் தாங்கரிய தீங்குமுண்டோ?

3

பெண்ணினத்திற் குயர்வளிக்கும் பெண்ணாய்வந்தாள்
பேறடைய ஈசனையே பெற்றுத்தந்தாள்
மண்ணகத்தோர்க் கபயமருள் மாதாய்வந்தாள்
மாட்சிமைசேர் மன்னனுக்காய் மண்ணில்வாழ்ந்தாள்
விண்ணகத்தே உடலுயிரோ டேறிப்போந்தாள்
வெய்யோனின் ஒளியெடுத்தோர் ஆடைகொண்டாள்
தண்ணளியோன் பதந்தோயத் தானேநின்றாள்
தஞ்சமதை நம்பினவர்க் கஞ்சல்உண்டோ!

4

கோனேறும் குலவுதிருக் கரத்தினைக்
குன்றாத மன்னர்வழிக் குலத்தினை
மீனேறும் மகுடமணிச் சிரத்தினை
மிககான துயர்போக்கும பலத்தினை
வானேறும் வழிக்கருளும் வரத்தினை
வலிமாய வலகைமிதி பதத்தினைத்
தேனேறுங் கமலமலர் முகத்தினைத்
தேடினவர் அஞ்சவொரு கேடுமுண்டோ.

'யுவன்' — காம்பொன்

## *யுவன் கவிதை 15*

18-03-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# தேவகைத்தாதையின் சிறப்பு

### அறுசீர் விருத்தம்

1

மன்னவன் தாவீதென்போன் மரபுவா லிபர்கள்தேவ
கன்னியை மணக்கவந்தே கையினிற் கோலுமேந்தப்
பொன்மலர்ச் சூசைகோலைப் பூத்திடச் செய்ததேவன்
அன்னையை தன்னைக்காக்க அவரையே தெரிந்தார்அன்றோ!

2

கன்னிகைத் துணைவிஏது கற்பம தானாள்என்று
தன்னுளே எண்ணியேங்கித் தண்டனை கேள்வியின்றி
மென்மனம் குழையவேக வேற்றிடம் செல்லஉன்ன
மின்னிடும் தூதன்சொல்லால் விடுத்தனன் போதல்அன்றோ!

3

தேசமாம் பெத்லகேமைத் தேடியே செல்லவேண்டி
வேசரி மீதுதாயை விளங்கிட வேற்றிமற்றும்
தாசனைப் போலத்தானும் தலைக்கயி றெடுத்துச்சென்ற
நேசனைச் சூசைதன்னை நிகர்த்தவர் வேறுயாரோ!

4

தூதுவன் துயிலிற்றோன்றிச் சொல்லிட எழுந்துதூய
மாதுடன் மைந்தனாரை மன்னவன் கொடுமைக்கஞ்சித்
தீதுகள் நேராவண்ணம் சேமமே எகிப்துசேர்த்த
ஆதுல னானதீர அப்பரும் சூசைஅன்றோ

5

கத்தனால் உலகிற்றோன்றிக் கத்தனை வளர்த்துவைத்துக்
கத்தனின் தாயைக்காத்துக் கத்தனுக் காகவாழ்ந்து
கத்தனின் மடியிற்சாய்ந்து கத்தனை அடைந்தவந்தக்
கத்தனின் தாதைசாவைக் காசினி யார்பெற்றாரே!

6

யேசுவும் இறையோன்எண்ணில் ஏத்திடும் மாலைதந்த
மாசுணம் மிதித்ததாயும் மாசிலாப் பிறவிஅன்றோ!
ஆசுடன் உதித்தார்யார்தான் அவனியிற் சூசைபோலத்
தேசுடன் திகழ்ந்தார்ஞானத் திருவருள் நிறைந்துவாழ்ந்தார்?

'யுவன்'

***யுவன் கவிதை 16***

15-02-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# வரங்களின் வாய்க்கால்

1

அங்கையால் மண்ணெடுத்துள் ஆவி யூதி
ஆதாரமை யாக்கிஅவன் என்பெடுத்துச்
செங்கையால் ஏவாளை யாக்கிக் கூட்டிச்
சிங்காரத் தோட்டத்துள் சேர்த்த தேவன்
தங்கையால் உண்டான தரணி மாந்தர்
தாழாது மேலேற மரிய வன்னை
மங்கையாம் வாய்க்காலால் வரங்க ளெல்லாம்
மாரிமழை போலவரச் சொரிகின் றாரே.

2

பேயென்னும் பொல்லாதான் வேய்வின் போதும்
பெரியசமர் உலகோடு புரியும் போதும்
வாயென்னும் பொறிமுதலாம் ஐந்துங் காயம்
வஞ்சிக்கப் பாவவினை விஞ்சும் போதும்
சேயென்னும் கருணையினால் சிறிய மாந்தர்
செகமிசையில் போராடுந் தீர ராக்கத்
தாயென்னும் மாமரியே வாய்க்கா லாகித்
தன்மைந்தன் வரங்களெல்லாம் தருகின்றாரே.

3

ஏரூரும் இடமெல்லாம் இட்ட நெற்கள்
எழிலுடைய பயிராகி எழுந்து முற்ற
நீரூரும் வாய்க்கால்கள் இருக்குமாப் போல
நிலவுலகில் அருளமுதம் சொரியும் வண்ணம்
காரூரும் ஊர்துமலைக் காட்சி தந்த
கன்னிகையே காசினியிற் கலங்குவார்க்குச்
சீரூரும் அமலனது கிருபை வாரும்
திருவாய்க்கால் ஆகிவரம் தருகின்றாரே.

4

எண்ணாத எண்ணமெலாம் எண்ணி யெண்ணி
எள்ளளவும் மனச்சாந்தி இல்லாராகிப்
புண்ணான மனத்துடனே திரியும் நீசப்
புன்பிறவி மனிதருக்குப் புதுமை மிக்க
பெண்ணான அன்னைமரி விண்ணி லேறிப்
பெரியதொரு அருள்வாய்க்கால் ஆகிநின்றே
கண்ணான மகனிடத்துக் கருணை வாரிக்
கவலைகெடப் பலவரங்கள் அருள்கின் றாரே.

'யுவன்' — காம்பொன்

## ***யுவன் கவிதை 17***

30-09-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# அமலோற்பவி அவதரியாவிடின் ...

○ "யுவன்" — கரம்பொன் ○

**1**

அலகைதனின் பெருஞ்சூது அகிலமோங்கு
அடைத்தபரக் கதவுசதா அடைத்தேநிற்கும்
நிலமுழுதும் பாவவிருள் நிறைந்துசூழும்
நிலைகலங்கி மாந்தருளம் நெருப்புமூழும்
மலமகற்ற வறியாத மனிதஆன்மா
மறுகியெரி நரகினிலே மங்கிவீழும்
திலகமென விளங்குதவி தரசன்வந்த
திருக்குலமும் பொலிவிழந்து தேயுமன்றோ!

**2**

உத்தமனார் யேசுபரன் உதிக்கமாட்டார்
உலகமுதல் மனிதரினால் கவிந்தபாவ
நத்தமதை நீக்கியிரார் நாளுந்தம்மை
நாமெல்லாம பெற்றுவரும் நலமுஞ்செய்யார்
சத்தியநற் திருச்சபைக்குத் தலைமைதாங்கார்
சஞ்சலத்தை நீக்கவல்ல தாயுந்தாரார்
முத்தியிலும் தேவனது தூதரன்றி
முழுநிலத்தோர் ஒருவருமங் கிருக்கார் இன்றே!

**3**

ஆதாமும் அடியடியாய் அவரின்பின்னே
அரனார்க்கே யடியவராய் அவனிவாழ்ந்த
தாதாக்கள் தாகமென்றுந் தணியாதோங்கும்
தலைக்காலத் தெய்வமொழி தானும்பொய்க்கும்
வேதாக மந்திரட்டித் தந்தவல்லோர்
வித்தகமும் இத்தலத்தே விழலாய்ப்போகும்
மாதாவென் றழைக்கவொரு மங்கையின்றி
மாநிலமும் மகிழ்விழந்தோர் அனாதையாகும்.

**4**

மங்காத தவஜுவக்கீன் ஆனாள் என்னும்
மாட்சிமிகு தம்பதிகள் மலடர் ஆவர்
சங்கீன்ற வெண்தரளத் தகவுசார்ந்த
சஞ்சூசை முனிபிரமச் சாரியாவர்
தங்காத முகில்வடிவிற் தேவன்வந்தே
தரித்தொருகால் இருந்ததிருக் கோயில்வாழ்ந்த
பொங்காத பொறைக்குரவர் சிமியோன்தானும்
பொறையிழந்தே துடித்துமடி போதுபோல்வர்.

## ***யுவன் கவிதை 18***

11-06-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

### “ அன்றும் இன்றும் ”

விருத்தப்பா

1

முன்னாள் அந்த வனாந்தரத்தில்
மோயீசன் தன் வேண்டுதலால்
மன்னா என்னும் அப்பந்தான்
மழையாய்ப் பொழிந்தோன் மைந்தன்தான்
பின்னாள் தன்னை மனுவாக்கிப்
பேணும் அப்பம் தானாகி
என்னா விதயம் எழுகின்றார்
எளியேன் என்ன தவஞ்செய்தேன்.

2

கல்லால் அப்பம் ஆக்கென்றே
காட்டப் பிசாசும் தேவன்வாய்ச்
சொல்லால் மனிதன் பிழைப்பானே
சுகமே யென்றார் நிறைவொன்றும்
இல்லா வெந்தன் இதயத்தே
இலங்கும் அப்ப வடிவாகி
எல்லா எழிலோ டெழுகின்றார்
ஏழை என்ன தவஞ்செய்தேன்

3

ஐந்தே அப்பம் கரமேந்தி
ஆசீர் வதித்தே அதைப்பெருக்கி
வந்த ஐயா யிரம்பேர்கள்
வாடப் பசியால் அதுதீர்த்தோன்
பிந்த எந்தன் இதயத்தே
பிணிதீர் அப்ப வடிவாகி
நந்தா மணிபோல் வருகின்றார்
நாயேன் என்ன தவஞ்செய்தேன்

“ யுவன் ” கரம்பொன்

# *யுவன் கவிதை 19*

09-12-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

## என்ன நிகழும்?

அறுசீர் விருத்தம்

(1) வான்தொடக் குவித்த போதும்
வைப்பதற் கடங்கா மிக்க
கோன்திரு வரத்தால் என்றுங்
குறைவற நிறைவு கொண்டாள்
தேன்தருப் புவனம் நீத்துச்
சென்றவா றின்று மீண்டு
தான்வரக் கொண்டால் இந்தத்
தரணியில் நிகழ்வ தென்ன?

(2) கால்படி மதியைக் கண்டே
காவிகள் மலரத் தூய
மேல்படி யிரவி கண்டே
மெல்லிதட் கஞ்சம் பூப்பச்
சேல்படி வாவி மேலாய்த்
திரியுவண் டினங்க ளிந்தக்
கால்எது? இரவோ இன்றேல்
காலையோ என்று நோக்கும்!

(3) ஆறிரு மீன்கள் சேர்ந்து
அழகுசெய் மவுலி கண்டு
ஏறிவான் இரவிற் சுற்றும்
இருஞ்சிறைப் புட்க ளெல்லாம்
மாறுத லாக மண்ணை
வானமென் றெண்ணித் தாழ்ந்து
மீறிய மகிழ்வைத் தங்கள்
மென்குர லிசையிற் காட்டும்!

(4) திவ்விய தாயின் பாதத்
திருமல ரிரண்டின் கீழே
வெவ்விடப் பறவை நாகம்
விழிவெளி பிதுங்கக் கண்டு
அவ்விடக் குருகுக் குஞ்சு
அனைத்துமா னந்தங் கொண்டு
ஔவிய முடையோர் துன்பம்
அடைவரென் றோசை செய்யும்!

(5) ஐந்துபத் தொருமூன் றுள்ள
அருள்மணி ஆரங் கண்டு
பந்தனக் கயிறென் றுன்னிப்
பசாசுகள் பயமே கொள்ளும்
வந்தனை புரியும் வானோன்
வாசனை வடமென் றேத்தும்
மந்திர மாலை யென்றே
மண்ணெலாம் மகிழ்ந்து கேட்கும்!

— “**யுவன்**” கரம்பொன்.

## *யுவன் கவிதை 20*

16-07-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# இயற்கையே !
# என்ன காட்டுகிறாய் ?

1

நிறைமதி நீயும் அழகாக
நீல வானில் வருகையிலே
பொறைஅம லன்நற் கருணையிலே
பொதிந்த வடிவைக் காட்டுகிறாய்

2

குறைமதி நீயும் குவிவாகக்
குறைந்து வளரும் போதினிலே
மறைபணி தூய மரிபாதம்
வணங்கு வடிவைக் காட்டுகிறாய்

3

காலை உதிக்கும் சூரியனே
கதிரைச் சிந்தி வருகையில் நீ
மாலை கொடுத்த மாமரியின்
மங்கா அழகைக் காட்டுகிறாய்

4

கூண்டுக் கிளியே தனியாய் நீ
கூம்பி இருக்கும் போதினிலே
ஈண்டெம் இறைவன் தனியாக
இருக்கும் இடத்தைக் காட்டுகிறாய்

5

தப்பிய கன்றே நீவந்து
தாயைத் தேடி ஓடுகையில்
திப்பிய* தாயை வீடடைவோர்
தேடும் வகையைக் காட்டுகிறாய்

6

மழையே நீயும் துளியாக
வந்து பெருகி ஓடுவதில்
பிழையற மனிதன் துறையாக
இறைதரு வரமே காட்டுகிறாய்

7

ஏழு நிறத்தோ டழகாக
இலங்கும் வான வில்லேநீ
மாழுங் காலம் உலகுசலம்
கொள்ளா தென்றே காட்டுகிறாய்

8

வானம் தெரியும் வால்மீனே
வளர்ந்து நீயும் வீழ்கையிலே
தானம் இல்லாச் சண்டாளர்
தனத்தின் முடிவைக் காட்டுகிறாய்

9

மலரும் தாமரை மலரேநீ
மாலை வாடிக் குவிகையிலே
மலரும் மனிதன் ஒருகாலை
மடியும் வகையைக் காட்டுகிறாய்

10

பகலவன் ஏறி வருகையிலே
பையச் சுருங்கும் நிழலேநீ
இகலவர் எங்கள் பொறுமைமிக
இருக்கும் நிலையைக் காட்டுகிறாய்

---

* திவ்விய

(யுவன்—கரம்பன்)

## ***யுவன் கவிதை 21***

14-10-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது



# மடுமாதாவுக்கு நிந்தாஸ்துதி

( 'யுவன்' — கரம்பொன் )

### கலிநிலைத் துறை

— 1 —

நாட்டுக் குள்ளோர் நல்லவ ரின்றி நடுச்சாமம்
வீட்டுக் கெல்லாம் போயிரந் தேபின் விறைப்புற்று
மாட்டுக் கொட்டில் தேடிய நீயோர் மாடத்தில்
காட்டுக் குள்ளே வந்தது கண்டேன் கண்டேனே!

— 2 —

புல்லன் ஏரோ தன்பகைக் கஞ்சிப் புலிக்காட்டில்
நில்லென் றேயோர் பாலக னோடே நினைவிட்டு
கல்லும் முள்ளும் தான்கடந் தேயோர் கழுதைக்காய்
நல்லன் சூசை சென்றன னோநீ நவில்வாயே!

— 3 —

அல்லும் பகலும் பாலனை வைத்துன் அக்கிள்மேல்
செல்லங் காட்டி நிற்பது தோரார் செயலன்றோ!
நில்லென் றேயுன் மைந்தனை யிந்த நிலம்விட்டால்
நல்லன் பெல்லாம் போய்விடு மோசொல் நல்லாளே!

— 4 —

ஆரம் பூணச் சுந்தரி நீயும் அறியாமல்
சீரங் கையில் கொண்டினி நின்றால் சிரிப்பாரே!
சோரங் கொள்ள என்மன மேவும் சொல்லக்கேள்
வீரம் வேண்டாம் தந்திடு நீபின் வேண்டிக்கொள்.

— 5 —

நீங்கா வண்ணம் இப்படி நீயும் நிலைநின்றால்
தாங்கா துன்னைத் தண்மதி கூனல் தவறுமோ
பூங்கா தேடிப் பூமணம் வாங்கப் போவாயேல்
தேங்கித் திங்கள் தேறுதல் கொள்ளும் தெரியாதோ!

— 6 —

கட்டிக் கொண்டாய் காரிகை நீயும் கதிராடை
இட்டுக் கொண்டாய் மீன்முடி சென்னி எழிலாக
பட்டிக் காட்டில் வந்தவுனக்குப் பவிசென்ன
துட்டுக் கொன்றாய் விற்றிடு மக்கள் தூற்றாமல்.

***யுவன் கவிதை 22***

14-04-1955 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# "படையணிக்குள் வாரீர்"

**எண்சீர் விருத்தம்**

படைதிரட்டல் பிறர்நாட்டைப் பறிக்க வல்லப்
பகைவரது பலமொருகை பார்க்க வல்லக்
குடைபிடித்துக் கோலோச்சிக் கொள்ள வல்லக்
குஞ்சரமேற் பவனிவர விரும்பி யல்ல
மடைதிறந்து வரமருளும் மாதா தம்மை
மனமார வாயார வாழ்த்த வென்றே
தொடைபிடித்துச் செபஞ்சொல்லுந் தூய தான
துன்னுசெப வடப்படையிற் சேர்வோம் வாரீர்!

வாளெடுத்து வஞ்சகரை வதைக்கா தாங்கோர்
வார்த்தையினா லழிக்கவல்ல வார்த்தை யானோன்
தோள்கொடுத்துச் சிலுவைதனைச் சுமந்து செந்நீர்
தோய்ந்தவுடல் உயிர்கொடுத்துக் கொடுத்த பேற்றை
தேள்படைத்த விடம்போல இருபால் நஞ்சு
செறிந்தழுழு நாத்திகரும் திருந்தித் துய்க்க
கூள்குடித்துங் குன்றாது குடும்பங் கூடிக்
குடும்பசெப மாலைதனைச் சொல்வோம் வாரீர்!

கத்தரினாற் பேதுருவாங் கல்லின் மேலே
கட்டியநம் திருச்சபையும் காலா காலம்
சத்துருக்கள் வெட்டுதலாற் சரிந்த வேத
சாட்சிகளின் குருதியுடற் சாந்தாற் செம்மை
இத்தரையிற் பெற்றதுவாய் இருக்கக் கண்டும்
ஏமாந்த மூடரைப்போல் இயக்க மில்லாச்
செத்தவர்போல் வாழாது ஜெயத்தைக் கொள்ள
செபமாலைப் படையணியிற் சேர்வோம் வாரீர்!

குருக்களொடு கன்னியர்சந் நியாசர் தம்மைக்
கொடுத்துதவும் விளைநிலமாம் குடும்ப வீட்டைத்
திருக்குடும்ப நசரேத்துச் சிற்றில் போலச்
செய்வதற்காய்த் திருச்சபையின் மக்கள் நாங்கள்
பெருக்கெடுத்த மலையருவித் தொடர்ச்சி போலப்
பெரியதிருச் செபமாலைப் படையிற் சேர்ந்து.
துருக்கரது படையழித்த கருவி யாலே
துயரகற்றுங் கன்னிகையைத் துதிக்க வாரீர்!

— "**யுவன்**" கரம்பொன்.

## *யுவன் கவிதை 23*

14-05-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# இராணியானார்

1. போரினில் கொல்வாரில்லாப் பொலிவுருக் கோலியாத்தை
நேரினில் நின்றுகல்லால் நெற்றியி லெற்றிவீழ்த்தித்
தாரினில் வெற்றிவாகை சூடிய தாவீதென்னுஞ்
சீரினான் வழியால்தாயார் சிறந்திடும் இராணியானார்

2. கோத்தொழு குடிசையாகக் குலைந்தவை அணையதாகப்
பூத்தெழும் அருணனென்னப் பூரணன் பிறந்தபோது
மூத்தொளிர் அறிவின்மிக்க மும்முடியரசர் தாழ்ந்து
ஏத்திட விறைவன்தாயார் எவர்க்குமே இராணியானார்

3. மன்னுயிர் புரந்துவையம் படைத்தவன் தாயார்மண்ணில்
இன்னுயிர் நீத்துப்பின்னை ஈடிலா வனப்புவாய்ந்த
தன்னுயர் உடலோடான்மா தழைத்திட எழுந்துவானில்
பொன்னுயர் முடியைச்சூடிப் பொன்றிடா இராணியானார்

4. இளம்பிறைத் திங்கள்பாதம் இறைஞ்சிட இரவியென்னும்
வளம்பெறும் ஒளியான்வந்து வதனத்தே வணங்கிநிற்பத்
தளர்விலா வாறிரண்டு தாரகை முடியாய்ச்சூழ
அழகெலாந் திரண்டுதாயார் அனைவர்க்கும் இராணியானார்

“யுவன்” காம்பொன்

## ***யுவன் கவிதை 24***

18-06-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# இவர் யார்?

1

அன்பால் எமை அழைக்கின்றார்
அருளால் எம்மை அணைக்கின்றார்
இன்பால் எம்மை இழுக்கின்றார்
இதமாய்த் தம்மை அளிக்கின்றார்

2

பாவம் செய்யிற் பதைக்கின்றார்
பணிகள் செய்யிற் களிக்கின்றார்
தூபம் செய்யிற் சொலிக்கின்றார்
துன்பம் செய்யிற் சலிக்கின்றார்

3

பலியில் நாளும் கொலையுண்பார்
பகலும் இரவும் சிறையுண்பார்
கலியில் நம்மை ஆட்கொள்வார்
கடுவில் நம்மை மேற்கொள்வார்

4

கோடா இதயம் கேட்பாரே
கொடுக்கின் அதனுள் வருவாரே
தேடா இதயம் தேடிவரத்
தேங்கும் வரங்கள் சொரிவாரே

5

இன்னார் யார்தான் பாலகரே!
இவர்யார் சொல்லும் பாலகரே!
எங்கள் யேசு பெருமானே
எம்மை ஆளும் இறையோனே.

யுவன்
காம்பொன்

## ***யுவன் கவிதை 25***

31-03-1954 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# "சோலையுள் தெய்வச்சுதன்"

### அறுசீர் விருத்தம்

மன்னுயிர் மீட்கத்தானோர் மனிதனாய் வந்ததேவன்
தன்னுயிர்ப் பலியிற்சாரும் தாங்கொணா வாதைதன்னை
உன்னிய போது தூய உடலெலாம் உதிரம்பீறிச்
சென்னிகன் மேட்டில்மோதச் செந்துகில் தோய்ந்தார் அந்தோ!

●

அந்தகன் விழிக்கச்செய்த அமுதமார் உமிழ்நீர்வற்றக்
கந்தநற் றைலம்பட்ட கால்களிற் குருதிசொட்டச்
சிந்திய சிகையுந்தாழ்ந்து திருமுக மலரோடொட்ட
எந்தையும் சிந்தைநொந்தார் ஏங்கினார் பதைத்தார் அந்தோ!

●

அலைகடல் அமர்த்துவாயும் அலகைகள் அடக்குகையும்
மலைதனில் விசுவரூப மாகிய மேனிதானும்
தொலைவழி நடந்துவேதஞ் சொல்லிடச் சோராக்காலும்
உலைமுகத் துற்றபொன்போல் உருகிடத் துடித்தார் அந்தோ!

●

பாங்குற அணைத்தாய் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு
நீங்குதல் பிரியமாகில் நீக்குக ஆனால்மற்று
ஈங்கென திதயம்போல இல்லவே தந்தாய்ஈது
ஆங்குன தெண்ணம்போல ஆகுக என்றார் அந்தோ!

●

வல்லவன் உரைத்தவார்த்தை வானெழுந் திசைத்தபோதில்
துல்லிபத் தேவன்கேட்டுத் தூதனை மைந்தன்மாட்டு
அல்லிவி லனுப்பவந்த அருவனு முருவமேந்திச்
சொல்லிய வார்த்தைகேட்டும் சோர்ந்துமெய் துடித்தார் அந்தோ!

●

பூரண மதியும்தேவ புத்திரன் துயரால்நொந்து
வாரண முகிலால்தன்னை மறைத்தனன் பனிநீர்தேக்கிச்
சீரணி சோலையாவும் சிந்தின அழுதாற்போல
தாரகை மின்னிமின்னித் தவித்தன தரணிநோக்கி

— "யுவன்" கரம்பொன்.

# யுவன் கவிதை 26

18-08-1955 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# இகபர இராக்கினி

நேரிசை வெண்பா

— I —

திங்கள்சிங் காசனமாய்ச் சிங்கார மீன்முடியாய்
அங்கையிற் பாயும் அறவூற்றே — செங்கோலாய்ப்
பொன்னைநகு மேலாம் புனிதமுகப் புன்னகையோ
டன்னைமரி கொண்டாள் அரசு

— II —

முத்தித் திருத்தூதர் முப்படையாய் முத்துற்ற
பத்திநெறி மாலை படைக்கலமாய் — கத்தன்தாய்
வெற்றி முரசறைந்து வெம்பேய் செருவடக்கிப்
பற்றி மிதித்தாண்டாள் பார்

— III —

தன்னரிய மைந்தனொடு தாரணியை மீட்பதற்காய்
பன்னரிய வாதைகளிற் பங்கெடுத்துப் — பன்னகத்தின்
ஏவலினால் ஏமாந்த ஏவாள் வினையறுத்துத்
தேவமகள் கொண்டாள்செங் கோல்

— IV —

பாரைப் படைத்தவனும் பாவந் துடைத்தவனும்
சீரை நிறுத்தவருள் செய்வோனும் — தாரை
ஒளிர்சென்னி மேலே ஒருங்குமுடி சூட்ட
அழகோங்கக் கொண்டாள் அரசு

— V —

மூவேந்தர் வந்தே முடிதோயத் தாட்பணிந்த
மாவேந்தர் மாதா மரியம்மாள் — பூவேந்தும்
தேனாள் செகத்துத் திருமறையின் தாயானாள்
வானாள் முடிபூண்டாள் வான்

— "யுவன்", கரம்பொன்

## ***யுவன் கவிதை 27***

22-12-1955 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# கரந்தானைக் காணவருவீர்

விருத்தம்

(1) வீசுந் தென்றற் காற்றினிலும்
விசும்பின் வெள்ளிச் சோதியிலும்
கூசுங் கதிர்க்கை ஞாயிறிலும்
குலவுங் குழவி மழலையிலும்
பேசுங் குருவின் மொழிதனிலும்
பெற்றோர் காட்டும் வழிதனிலும்
தேசிற் கரந்த தெய்வத்தின்
தேகங் காண வருவீரே!

(2) காலைச் சேவற் குரலொலியில்
கருணைக் கோனின் திருவொயிலில்
ஆலைக் கரும்பின் நறுஞ்சாற்றில்
ஆயர் கடைவெண் டயிராற்றில்
மாலைக் கமையும் நறுமலரில்
மருவிப் பெருகிக் கரந்தானைச்
சீலைக் கந்தைக் குள்ளுற்ற
சிசுவிற் காண வருவீரே!

(3) தாயிற் சுவைத்த பால்தனிலும்
தமிழிற் சுவைத்த பாதனிலும்
காயிற் பிஞ்சிற் கனியாது
காலங் கனிந்த கனிதனிலும்
நோயிற் கலங்கு மிளையோனின்
நோய்தீர் ஒருமா மருந்தினிலும்
போயுட் கரந்த பொற்பரனைப்
புறத்தே காண வருவீரே!

(4) நீதிக் குடையின் நிழல்தனிலும்
நிலவின் தண்மை விளக்கினிலும்
ஊதிக் களிக்கும் குழல்தனிலும்
உலவுந் தூயோர் வாழ்வினிலும்
சோதிப் பொலிவாய்ச் சுவைப்பொருளாய்ச்
சொர்ணச் சுடராய்க் கரந்திருக்கும்
ஆதிக் காலம் இல்லானின்
ஆகங் காண வருவீரே!

(5) இல்லார்க் கீவோர் இருகரத்துள்
இறுமாப் பில்லார் இதயத்துள்
கல்லார்க் குரைப்பார் கனிவாயுள்
கலங்காத் தவத்தோர் காயத்துள்
நல்லார்க் குற்ற செல்வத்துள்
நற்றாய் பெற்ற பிள்ளைக்குள்
பல்லாண் டுள்ளிற் கரந்தானின்
பாதங் காண வருவீரே!

(6) வானம் பார்க்கும் மள்ளர்க்கு
வந்த மழையுள் வறுமைக்கண்
தானம் பார்க்கும் நல்கூர்ந்தார்
தண்டிப் பெற்ற சதக்காசுள்
மோனங் காக்கும் துறவிகளின்
மூச்சுள் மூத்தோர் அருள்வாக்குள்
ஞானப் பொருளாய்க் கரந்தானின்
நயனங் காண வருவீரே!

— "யுவன்". கரம்பொன்

# யுவன் கவிதை 28

13-10-1955 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது



## மாலை

பன்னிருசீர் விருத்தம்

சீர்கொண்ட மணிகொண்டு திகழ்மாலை செயமாலை
செப்புதற் கினியமாலை
செகமீதி லருள்மாரி பொழிமாலை திருமாலை
சீவியங் கொடுக்குமாலை
நீர்கொண்ட புவியெலாம் நிலைகொண்ட நெறிமாலை
நித்தியர்க் குகந்தமாலை
நீசரைக் கைதூக்கி நிர்மலன் பாதத்தில்
நிலைபெறச் சேர்க்குமாலை
கார்கொண்ட லூர்திலே மசபியேல் குகையிலே
கன்னிமரி கொண்டமாலை
கற்பினைக் காப்பதற் கொப்பிலாத் துணைநின்று
கைதூக்கி வைக்குமாலை
பேர்கொண்ட பரலோக பேரின்ப பாதைக்குப்
பிரகாச மானமாலை
பேறுபல னருளியிருள் அகலவொளி தருமாலை
பேர்பெற்ற செபமாலையே

•

ஐம்பத்து மூன்றுமலர் அணிசெய்யு மொருமாலை
ஆபத்தி லுதவுமாலை
ஐந்துகா யன்தந்த அன்னைக் கலங்கார
அணியாகச் சூடுமாலை
சம்பத்து மோட்சத்திற் தந்துதவு தனமாலை
சஞ்சீவி யானமாலை
சகலவர மோடிவரு நெடியசுனை யானதிருத்
தாயாரே தந்தமாலை
கம்பத்தி லேறுகொடி யாடவிடி யேறுபடக்
கலக்கிவெகு பதிதர்தம்மை
கருவறுத் தேதிருச் சிலுவையின் வீரரைக்
காப்பாற்றித் தந்தமாலை
நம்பத் தகுந்தவொரு ரட்சண்ய மாலையொளி
நந்தாத முத்துமாலை
நாளுமொரு முறையேனு மோதிவர வருள்மாலை
நாம்கண்ட செபமாலையே

•

விண்ணோக்கி யேற்றுமொரு வடமான பெருமாலை
வீட்டிற் குகந்தமாலை
வேதானு சாரத்தி லெநாளும் நிலைகொள்ள
விருதாக வந்தமாலை
கண்ணோக்கி யெம்மையுங் கன்னிமரி காத்திடக்
கையா லளித்தமாலை
கவலைநிலை குலைவித்துக் காசினியை மகிழ்வித்துக்
கவர்கின்ற அந்தமாலை
மண்ணோக்கி யெமைமீட்க வந்ததிருச் சுதனார்க்கு
மார்பணிய வேற்றமாலை
மரணத்து வேளையில் மாந்தரைத் தேற்றிவெகு
மனச்சாந்தி நல்குமாலை
பெண்ணோக்கித் தன்தலையை மிதித்திட்ட தால்நொந்த
பேய்நெஞ்சு அஞ்சுமாலை
பிரியபிர சாதபரி பூரணியென் றேமரியின்
பெயர்போற்றுஞ் செபமாலையே.

— "யுவன்". கரம்பொன்

## ***யுவன் கவிதை 29***

23-07-1955 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# சின்னமடு மாதாவுக்கு நிந்தாஸ்துதி

### கட்டளைக் கலித்துறை

மொட்டைச்சி யோநீ செடியமுக் காடேன் முழுமளவு
கட்டைச்சி யோநீ மதியேன் அடிக்கீழ் கதிரவனோர்
சட்டைச்சி யோநீ குளிரோ உடம்பு சயனமிலா
நிட்டைச்சி யோநீ நெடுநாள் இதுபோல நிற்கின்றையே!

●

ஆசைப் படுவார் அணைப்பார்கள் என்றோ அபயமென
ஓசைப் படுவார் பிடிப்பார்கள் என்றோ ஒருபொழுதும்
சூசைக் கொழுநர்க்கு மெட்டாத தூரம் சுதனுடனே
பூசைப் பலிப்பீடத் தேறிக்கொண் டாய்நீ புகல்மரியே!

●

சிறக்கத் தெரிகின்ற கண்ணாடிக் கூண்டிட் சிறைப்படுநீ
பறக்கத் தெரிந்த பசுங்கிள்ளை யோவென்று பாருலகை
மறக்கத் தெரிந்த மரியன்னை தானோ மரக்கதவைத்
திறக்கத் தெரியாது திண்டாடும் நீயார் திருமகளே?

●

மாலை பிடித்து வான்பார்க்கும் மங்காய் மலர்மலர்ந்த
கோலைப் பிடித்திடு சூசை வரக்கூடும் கோதறநீ
காலை வரையும் பொறுத்தால் அவரும் கரியபெரு
வேலை கடந்தும் விரைந்து வருவார் வெளிப்படையே.

●

அள்ளிப் பணத்தைப் பலபேர் தரநிற்க ஆங்குசிலர்
வெள்ளிச் சுடர்போல் விளக்கேற்றி நிற்க விரும்பிடுதல்
வள்ளிக் கொடியன்ன பெண்ணிற்கழகோ வசையகல
எள்ளிக் கடிந்தே தவிர்த்திடு தூயநல் ஏந்திழையே!

●

தெங்கின் இளநீரும் தேனும் தினையும் திரள்பனையின்
நுங்கும் பனங்காயும் எள்ளுநறு பாகும் நுகருதற்கோ
சங்கின் இசையார் சுருவிற் கருகே சாவணையுள்
தங்கி யிருக்க விரும்பினை சொல்லு தலைமகளே!

— "யுவன்", கரம்பொன்

## ***யுவன் கவிதை 30***

03-01-1956 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# காவலா வருக !

### அறுசீர் விருத்தம்

1. திருமறைக் காவலோனே! தீந்தமிழ்க் காவலோனே!
தருநிறை ஈழமோடு தாய்வட நாடுமற்றைப்
பெருந்துறைத் தமிழ்நாடெல்லாம் பீரியமோ டேகி ஆன்ம
மருந்தறை வீரவானே வான்புகழ் பரப்பவாவா!

2. செந்தமிழ் அரசிப்பக்கல் சிங்களப் பாங்கியோடு
அந்தமில் உலகஞ்சுற்றும் ஆங்கிலச் சகியுங்கூடிக்
குந்தநாற் றிசையும்போற்றுங் குலவுயாழ்ப் பாணம்நின்று
செந்தழற் கதிரோன் என்னச் செகமெலாம் துலக்கவாவா!

3. சத்திய மலையாமுன்னைத் தகர்த்திடல் எழிதாய்எண்ணிச்
சுத்தியல் அரிவாள்கொண்டார் சோர்ந்தனர் கைகால்கண்
டோம்
இத்தொடு எண்பதாண்டு ஏறுபோல் வீறுகொண்டு
வைத்தகால் பின்றாக்காத வலிவினாய் வளர்ந்துவாவா!

4. வாரமோர் முறைபோதாகி மணங்கமழ் மலரோய்வாவா!
காரமார் கடுகேயாகிக் கலைமருந் களிப்போய்வாவா!
சாரமார் கன்னலாகிச் சகலமும் இனிப்போய்வாவா!
தீரமார் ஞானிஏவச் செழிப்பவோய் சிறக்கவாவா!

5. ஆதவன் விளக்கைஏற்ற அலருகா மலர்கள் தூவச்
சூதவம் கீதம்பாடச் சூடுடை மயில்களாட
மாதவத் தடியார்பீடம மருவியே பலியையூட்டப்
பூதலம் புத்தாண்டுன்றன் புதுவினை தொடக்கவாவா!

— "யுவன்". கரம்பொன்

## *யுவன் கவிதை 31*

01-07-1972 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# மடுத்தாயே! அபயம்!

### எண்சீர் விருத்தம்

ஆழமுறு கடல்சூழ்ந்த அகிலம் எல்லாம்
அழகான மாளிகைகள் இலங்கத்தாயே
வேழமூறு காடுகளும் வேங்கைசுற்றும்
வெற்பருகுக் குகைகளையும் விரும்பல்போல
ஈழமூறு மக்களிலும் இரக்கம்பூண்டே
இனியசுனை மருவுமடுக் காட்டில்வந்தீர்
நீளமுறு வழிதாண்டி ஓடிவந்த
நீசரெமைக் கைதூக்கி நிறுத்தும் அம்மா !

II.

தாயுமது திருப்பதிசூழ் தருக்கள்வாயு
தாக்கவதன் பச்சிலைகள் பதறல்போலும்
போயுயரப் புகழ்பரப்பி மகிழ்வையூட்டும்
பொங்குகொடிப் படபடப்புப் போலுமெங்கள்
மாயுமறக் கரம்பதற நீட்டியுந்தன்
மாரியென வழங்குவரங் கோரிநிற்கத்
தேயுவென வெழுநேசம் இதயம்விஞ்சித்
தேம்பியிரு கண்ணில்நீர் ஆகிற்றம்மா !

III.

தேனெடுக்கும் வண்டினங்கள் கானம்ஊதத்
திரள்முடித்தச் சன்குருவி தாளம்போடத்
தீனெடுத்த கவியிருந்து முழவுகொட்டத்
தேனினிய குரலெடுத்துக் குயில்கள்கூவத்
தானெடிய சிறகுடனே மயிலும் ஆடத்
தக்கவண நடனமது காணும்தாயே !
கோனெடுத்த கரமிருக்க மன்னுமற்றக்
குலவுகர மெடுத்தெமைநீர் அணையும் அம்மா !

IV.

கொடிமரத்தின் அடியூற்றும் நெய்யைப்போலும்
கோடிசனர் ஏற்றுதிரி மெழுகுபோலும்
கடியதுயர் மிஞ்சியுளம் உருகிவாடிக்
கானகத்துக் கருணைபொழி உன்னைநாடி
நெடியவனங் கடந்துனது நிழலில்வந்தே
நின்றுகரம் குவித்துவரம் வேண்டு எங்கள்
மிடியகலக் கோடிவரம் தந்தோமும்
மீண்டுமெங்கள் மனைதிரும்ப விடைதா அம்மா !

" யுவன் "—கரம்பொன்.

## ***யுவன் கவிதை 32***

23-10-1958 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# மொழிகொள்ளாதே!

—: "யுவன்" — கரம்பொன் :—

### நேரிசை வெண்பா

நித்தியத்தின் தேவன் நியமித்த வானுலகிற்
சத்தியத்தின் வேதத் தலையாகிப் — பத்தொன்பான்
ஆண்டளவா யாண்டின் றமல னடிசேர்பாப்
பாண்டவரைப் பாடும் பரிந்து.

### விருத்தம்

எத்திக்கும் அருள்கொழிக்கு மாதவனாய் அஞ்ஞான விருளையோட்டி
வத்திக்கான் தனிலிருந்தே வான்குடையின் கீழுலவு வையமெல்லாம்
தித்திக்குந் தனியரசாய்த் திருச்சபையின் செங்கோலைச் செலுத்திமேலாம்
முத்திக்கோர் வழிதந்த பாப்பரசர் மறைந்ததுயர் மொழிகொள்ளாதே.

●

அந்தமிலாத் திருச்சபையி லணைந்திருக்கும் நாற்பத்தோ டைந்துகோடி
மந்தைகளை மேய்த்துவெகு மாண்புபெற வைத்தபிதா மற்றுநீதி
சிந்தையிலே குன்றாத திருக்கேணி தெரிந்தெடுத்த செபத்தின்வீடு
நந்தாதஅறவிளக்கின் றணைந்துவிட்டார் நமதுதுயர் மொழிகொள்ளாதே.

●

செஞ்சீனத்திருச்சபையிற் றிரண்டெழுந்தகொடும்புயலின் சீற்றத்தாலும்
நஞ்சான ரூஷியத்தில் நாத்திகந்தான் நடத்திவரும் நலிவினாலும்
விஞ்சியதால் வருந்திமனம் வேதனையிற் றோய்ந்தனலில் வெந்தோ இன்று
துஞ்சினர்நம் பாப்பரசர் துயரநிலை புகன்றிடவெம் மொழிகொள்ளாதே.

●

பூவுலக சிட்டரொரு கலைஞானி சமாதானப் புனிதவீரர்
தேவமரி பாலகனைக் கண்ணாரக் கண்டவொரு தெய்வநண்பர்
ஆவலொடு காண்பவர்க்குக் காட்சிதந்தே யரவணைக்கு மன்பின்செல்வர்
யாவருக்கும்நல்லபிதா மறைந்துவிட்டார் இத்துயரம் மொழிகொள்ளாதே.

●

மரணமெனுந் திரையிவரை மறைத்திடினும் மங்காத மகிமைகாண்போம்
சிரவணத்தின்சோதியிவர் கல்லறையிலென்றென்றுஞ் சிறக்கக்காண்போம்
அரவணைத்த தேவனது தயவினால் அர்ச்சசிஷ்டர் ஆகக்காண்போம்
பரமனையே யிவர்க்கிவைகள் நல்கவென்று பாதமலர் பணிந்துநிற்போம்.

## ***யுவன் கவிதை 33***

16-09-1951 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# வானரசியே! வருக

○ "யுவன்" — கரம்பொன் ○

### கொச்சகக் கலிப்பா

**1**

தாயான நீயெமக்குத் தஞ்சம் அளிப்பதற்கும்
பேயான பகைவனிடர் பின்போக்கி வெல்வதற்கும்
ஓயாமல் எம்முடனே உறைவதற்காய் உத்தமியே
மாயாநின் திருமேனி வடிவுடனே வாராயோ?

**2**

வெண்ணாருணன் உடைதரித்து வெள்ளிமுடி சிரமணிந்து
வண்ணச்சிற் றிடையிலங்க வானீலக் கச்சுடுத்தி
விண்மதியாம் வாகனத்து வீற்றெழுந்தே மேதினியோர்
கண்குளிரக் காட்சிதரக் கன்னிகை நீ வாராயோ?

**3**

கண்கவரு தோளிணையும் காரொத்த குளலிணையும்
மண்ணவர்கள் கண்டறியா வனப்புடைய குழையிணையும்
பெண்களுக்கோர் மாதிரியாய்ப் பிறரறியா தேமறைத்து
வெண்ணெடுமுக் காடுடனே விண்ணிருந்தும் வாராயோ?

**4**

அன்றலர்ந்த தாமரைமேல் அம்பலிள மலரிரண்டு
நின்றலர முல்லைதரும் நீளரும்பும் வரிசைபெற
நன்றழகார் நயவதனம் நகைபொலிய நாயகியே
இன்றெமக்கோர் காட்சிதர இப்புவிக்கு வாராயோ?

**5**

அரியபிதாப் படைத்தபுவி யவர்சுதனார் மீட்டபின்பு
இருவரதும் நேசமதில் இலங்குதிரு இஸ்பிரித்து
பெருமருளால் புதுப்பிக்கப் பின்தொடர்ந்த கன்னிகையே
திருவுருவக் காட்சிதரத் தேவனொடும் வாராயோ?

## ***யுவன் கவிதை 34***

09-07-1953 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# சீரினாள் தந்த சின்னம்

எண்சீர் விருத்தம்

1

அந்திக்கோர் வழிதேடின் உத்தரீயம்
        அணிவதிலே ஆசைமிகக் கொள்ளவேண்டும்
சிந்தித்தே செபமாலை செபிக்கவேண்டும்
        செகமதிலே இவைபரவச் செய்யவேண்டும்
சந்தித்தோர்க் கிவைபெருமை சாற்றவேண்டும்
        சந்ததமும் இவற்றைநிலை நாட்டவேண்டும்
வந்தித்தே இவைகொண்டு வாழ்த்திவேண்டின்
        வானரசி தராததொன்று வையம்உண்டோ ?

2

மல்லிகையின் அரும்பெடுத்து மாலையாக்கி
        மனமகிழ மார்பணிந்து வந்தேயென்ன !
எல்லையிலா வனப்புடைய கோகினூரை
        எடுத்துவெளி நெஞ்சிடத்தே ஏந்தியென்ன !
தொல்லைதரு மரணம்எமைச் சூழ்ந்தபின்னர்
        துணைக்கிவைகள் வந்துநெறி நிறுத்துமாமோ ?
சொல்லிவரு மாலையொடு உத்தரீயம்
        சோதிமய வீடடையச் செய்யுமன்றோ !

3

மாமரியும் பாலனுடன் வந்தேதோற்றி
        மங்காத சபைமுதல்வன் சீமோன்என்னும்
நாமமுறு முனிவருக்கு நல்கிச்சென்ற
        நல்லவிரு தானதிரு உத்தரீயத்
தாமமதைப் பக்தியுடன் தாங்குவோர்கள்
        தங்கள்எழில் வாழ்வில்ஒளி தழைக்கவாழ்ந்து
சேமமதாய் உத்தரிப்புத் தலமுந்தப்பிச்
        சென்றிடுவர் மோட்சமனை தேவதாயால்

4

அருவுருவாம் ஆண்டவன்பால் அகத்தைவைத்தே
        அவரன்னை மாமரிபால் அன்புவைத்தே
கருணைபுரி செபமாலை கரத்திலேந்திக்
        கார்மேலின் உத்தரீயம் தரத்தில்தாங்கின்
வருபிணிகள் மங்கிவிசை மடிந்திடாவோ ?
        வான்கதவும் வருகவென வழிவிடாதோ ?
இருளகலு மார்க்கமிதற் கீடும்யாதோ ?
        இனியெடுத்துச் சொல்லுதற்கே இடமும்உண்டோ?

"யுவன்"

## *யுவன் கவிதை 35*

14-05-1955 சத்திய வேத பாதுகாவலனில் பிரசுரிக்கப்பட்டது

# தேவசுதனைச்
# சுவீகரித்த திருத்தாதை

### கலிவிருத்தம்

வண்டுதேனை உண்டுபாடி மகிழுகின்ற தேமலர்த்
தண்டுகாவி நின்றிலங்கு தவிதுராச மைந்தனா
கொண்டுநாடு நீங்கியோடிக் குழந்தையேசைக் காத்தரேல்
அண்டுமெங்கள் மேலிரங்கி அவலைநீக்கல் வல்லையோ!

●

அரம்பிடித்து வாள்திருத்தி அயர்விலாது நாளெலாம்
மரம்பிடித் தரிந்தபோதில் மறுவிலாத மாமலர்க்
கரங்கொடுத்து வந்தயேசு கத்தனெந்தை கேட்டிடில்
வரங்கொடுத்தெம் வாதைநீக்கி வந்துகாத்தல் வல்லையோ!

●

பரமதேவ னுக்குகந்த பலியதாகப் பாரிலே
நரனுருத்த ரித்துவந்த நமதுயேசு பாலனை
அரவணைத்து உச்சிமோந்து அமுதுதேடி ஈந்தவர்
சிரமமேது மின்றியெங்கள் சிறுமைபோக்கல் வல்லையோ!

●

உப்பிலாத பண்டமன்ன உலகவின்பம் வென்றவன்
ஒப்பிலாத ஞானசோதி ஒளிவளர்த்துத் தந்தவன்
தப்பிலாத புண்யமேழும் தவழநின்ற தேசினன்
அப்பனுகி யெம்மையாண்டு அரவணைத்தல் வல்லையோ!

●

தேவமார்பி லேசரிந்து தேவதாய ணைத்திட
சீவனேபி ரிந்தநேச தேவதாதை தம்மைநாம்
ஆவலோடு வேண்டிவந்தால் அந்திவேளை நிச்சயம்
பாவமாசி லாததூய பாக்யசாவு வல்லையோ!

— "யுவன்", கரம்பொன்.

## ***யுவன் கவிதை 36***

1972 கரம்பொன் பங்கு மலரில் பிரசுரிக்கப்பட்டது

### புண்ணியப் பொன்னூர்

கரம்பனூர்க் கவிஞர் அ.யுவக்கீம்பிள்ளை

முட்டையிட்டெழுந்த கவுதாரிநீள் தாழையின்
முதுபெருங் கிடைபடர்ந்த
முகுட்டையின் கொடிமறைவி லேயிருந்தே வெற்றி
முரசென்னக் குரலிசைப்ப
நிட்டை விட்டெழுகின்ற விருடியென வலம்புரிகள்
நித்திலம் முதிர்ந்ததென்று
நீள்கடலி னாழத்திருந்து பறை யறைகின்ற
நெய்தலைக் குடபாலதாய்க்
கட்டவிழ்ந் திட்டநீர் மற்றையூர்க் கிட்டுவருங்
கவின்நாரந்தனை குணக்காய்க்
கடலினிடைக் கோட்டையொடு கப்பல்பல நிற்கின்ற
காவலூர் தனைவடக்காய்
அட்டதிக்கெங்கணு மன்ன தானத்திலே
அதிமேன்மை பெற்றிலங்கும்
அறவோர்கள் சூழ்கருவில் அவாசி திசையெல்லையாய்
அமைந்தவூர் கரம்பொனூரே.

ஈழத்திலே முந்து தமிழாயராய் வந்த
எயில் மேய்ப்பர்தம்மை அன்று
ஈன்றிட்ட நன்னாடு இணையாக இன்னமும்
ஈராய ரீந்த நாடு
ஆழத்தி லேயன்பு நிறையிறைவ னடியாரை
அதிகமாய்த்தந்த நாடு
அண்டினார் தமையென்றுங் கைவிடா தணைக்கின்ற
ஆதரவி னார்கள் நாடு
தாளத்தி லேயுமிசை ஞானத் திலேயுமுயர்
தகவுள்ளோர்மலிந்த நாடு

## *யுவன் கவிதை 36*

1972 கரம்பொன் பங்கு மலரில் பிரசுரிக்கப்பட்டது

தானத்திலுந் தெய்வத்தியானத்திலுஞ் சிறிதுந்
தாழா துயர்ந்த நாடு
சூழத் துதிக்கின்ற அடியோர்கள்தமக்கிறைவன்
சொல்லொணா நலங்க ளீயும்
சுத்தவாளன் செபஸ்தியார் காவல் புரிகின்ற
சோலையூர் கரம்பொனூரே.

உலகத்திற் கற்ற பேரறிஞருள் ஒருவரை
உதரத்திற் சுமந்த நாடு.
ஒரு குடும்பத்திலே யொன்று பட்டனைவரு
மொண்டுறவு பூண்ட நாடு.
கலகத்தி னிருள் கவிந்தறியாத பொன்னாடு
கற்பினிற் சிறந்த பெண்கள்
காவியத் தலைமுறைகள் காலத்திலே தொட்டுக்
கறையின்றி வாழ்ந்த நாடு.
அகலத்திற் சென்றுழயர் வணிகத்திற் பொருளீட்டும்
ஆடவர்க ளணிசெய் நாடு
அன்னையொடு தந்தையர்தங்கண்கண்ட தெய்வமென
அஞ்சலிப் பார்கள் நாடு.
இலகத்தின் எழிலுருவிற் றீவேழுந் திகழ்ந்துதமிழ்
இத்திக்க விளம்பு நாடு.
சிங்காரச் சோலையொடு செந்நெலுங் கன்னலுஞ்
செறிந்தவூர் கரம்பொனூரே.

இல்லொன்று தனக்கென்றே யில்லாத போதிலும்
இறைவனுக் கிருக்க வென்றோர்
இலங்குமெழில் ஆலய மெருசலங் கோயிலென
எடுத்தவர் இருந்த நாடு.
வில்லொன்று பாணமென விரைந்து பணிபுரிந்தபல
விறலோர்கள் வாழ்ந்த நாடு.

## *யுவன் கவிதை 36*

1972 கரம்பொன் பங்கு மலரில் பிரசுரிக்கப்பட்டது

விண்ணவர்க்கொத்தபல நன்னெறிக் குரவர்கள்
வேதத்தை வளர்த்த நாடு.
சொல்லொன்று செயலொன்று பிறழாது எஞ்ஞான்றுஞ்
சொல்லினுக்குரிய செய்கை
சோர்விலா தியற்றிவரு மூரினா ரென்றுலகு
சொல்லிடத் துலங்கு நாடு.
கல்லொன்று பெருமனைகள் கடவுளரு ளாலெங்குங்
காண்பதற் குரிய நாடு.
கலையோடு திருவாடக் கற்போடு பொற்பாடக்
காணுமூர் கரம்பொனூரே.

அன்பென்ற இறையுருவம் நீதிக் கிழுக்கின்றி
யமர்ந்து தானி ருப்பதற்கு
அருகதைக்குரியவர் யாரென்று தேடியே
ஆயரெயில் தன்னை யண்டி
முன்போன்றி வாழ்ந்தவரை முத்திக் கனுப்பியினி
முடுகுவார் ஒருவர் தேடி
மூதூர்கள் பலசென்று சுற்றியே மீளவும்
முன்னோன் கரம்பொனூரின்
வன்பொன்று சொல்வாயி லொலியாத வாய்மையான்
வழிவந்த செல்வ மைந்தன்
வானவர்க் கிணையான வன்ரனியெம் ஆண்டகையை
வந்தடைந் துற்ற பேறா
யென்பென்று பார்ப்போர்க ளேங்கினும் மூப்பினும்
ஏறுபோல் நிமிர்ந்து நின்று
இறைவனுக் குழைக்கின்ற சுவாம்பிள்ளை யடியாரின்
றிருக்கு மூர் கரம்பொனூரே.

கரம்போன் யுவன்
1972.

# ***யுவன் கவிதை 37***

1995 ஊர்காவற்துறை புனித மரியாள் ஆலய நூற்றாண்டு மலரில் பிரசுரிக்கப்பட்டது



### இடர்தீர்த்துக் காத்திடம்மா
(திரை விருத்தம்)

சீராரும் தேவதிரு மகனான இயேசுதனைச்
சித்தமுவந் துதரமேந்திச்
சிதையாத கன்னிகையாய் செப்பரிய அற்புதமாய்ச்
செகமீதே யீன்ற தாயே!
பாராறு பன்னிரண்டு பரவவக வைதனிலே
பற்றுமுயிர் நீத்துயிர்த்துப்
பாதிமதி மீதுமலர்ப் பங்கயமாம் பதமிரண்டும்
பதியவைத் துதயமாகும்
பேராரு மருணபிர காசனையோ ராடையெனப்
பிரியமொடு பூண்டுகொண்டு
பெட்புமிகு வானோர்கள் பிரியாது புடைசூழ்து
பேறுடையா ளென்று போற்ற
ஈராறு விண்மீன்க ளிணைந்தமுடி சிரமேந்தி
எழுந்து பரலோகமேறி
இருக்கின்ற இராக்கினியே ஏங்கியழும் எங்களது
இடர் தீர்த்துக் காத்திடம்மா!!

(ஆசிரியர் அ. யுவக்கீம்பிள்ளை)
- கரம்பொன் -